சிறப்பு நீதிமன்றம் எஸ்.சி/ எஸ்.டி வழக்குகள், திருவண்ணாமலை
முன்னிலை– திருமதி.S. காஞ்சனா, M.L.,
அமர்வு நீதிபதி (மு.கூ.பொ) எஸ்.சி/எஸ்.டி வழக்குகள்,
திருவண்ணாமலை.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30–ஆம் நாள் திங்கள் கிழமை

சிறப்பு அமர்வு வழக்கு எண்.106/2019
(கீழ்பென்னாத்துார் காவல் நிலைய குற்ற எண்.357/2016)

| | |
|---|---|
| அரசுக்காக குற்ற முறையிடுபவர் | கூடுதல் காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை உட்கோட்டம், கீழ்பென்னாத்துார் காவல் நிலைய குற்ற எண்.357/2016 |
| எதிரிகளின் பெயர் | A1.ராஜ்பாபு, த/பெ.மாணிக்கம்,<br>A2.சிவலிங்கம், த/பெ.கலியமூர்த்தி,<br>A3. கார்த்தி, த/பெ.பெரியசாமி,<br>A4. கேசவன், த/பெ.கிருஷ்ணன்,<br>A5. பாபு, த/பெ.சேகர்,<br>A6. மணி, த/பெ.ரங்கநாதன்,<br>A7. முருகன், த/பெ.கோபால்,<br>A8. கணபதி, த/பெ.ராமகிருஷ்ணன்,<br>A9.விஜி, த/பெ.பெருமாள், (இறந்தார்)<br>1 முதல் 9 வரையிலான எதிரிகள், மேக்களூர் கிராமம், கீழ்பென்னாத்துார் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். |
| எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | 1ம் எதிரி மீது ச/பி.147, 148, 324, 506(ii) உ/இ 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) of SC/ST (POA) Amended Act 2015.<br>2 முதல் 9 வரையிலான எதிரிகள் மீது ச/பி.147, 148, 506(ii) உ/இ 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) of SC/ST (POA) Amended Act 2015. |
| எதிரிகளின் வழக்குரை | குற்றவாளிகள் இல்லை |

| | |
|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் தண்டனை அல்லது தீர்ப்பு | இறுதியாக, 1–ஆம் எதிரி பிரிவு 147, 148, 324, 506(ii) உ/இ 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1) (r) of SC/ST (POA) Amended Act 2015 இன் கீழும், 2 முதல் 8 வரையிலான எதிரிகள் பிரிவு 147, 148, 506(ii) உ/இ 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1) (r) of SC/ST (POA) Amended Act 2015 இன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது. 9–ஆம் எதிரி விஜி இறந்துவிட்டபடியால் அவருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டதாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே அதுகுறித்த உத்தரவு எதுவும் இல்லை. எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணங்கள் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.எஸ். கண்ணதாசன், அரசு சிறப்பு வழக்கறிஞர், திருவண்ணாமலை. |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | 1–ஆம் எதிரிக்காக திரு.R.D.பாண்டுரங்கன், வழக்கறிஞர், திருவண்ணாமலை.<br><br>2 முதல் 8 வரையிலான எதிரிகளுக்காக திரு.M.ஜெயபாலன், வழக்கறிஞர், திருவண்ணாமலை. |

## CASE SUMMARY

| | | | |
|---|---|---|---|
| i | The period of remand of the accused | : | A1, A2, A4, A6 and A8 are Surrendered as per Hon'ble High Court Order in Crl.OP. No.24684/2016 dated 09.11.2016.<br><br>A5 and A7 are Surrendered as per Hon'ble High Court Order in Crl.OP. No.24928/2016 dated 14.11.2016.<br><br>A3 and A9 are = 30.10.2016 – 10.11.2016 (11 days) |
| ii. | The date of filing of the complaint / final report in the Court | : | Complaint – 30.10.2016<br>Final report – 08.04.2019 |
| iii. | The date of committal of the case to the Court of Session | : | - |
| iv. | The date of questioning of the accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | Charge Framed on 19.03.2020 |
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts | : | 1. This Court Cr.M.P.No.1040/2022, U/s.70(2) Cr.P.C. Petition filed and the same was allowed on 07.09.2022.<br>2. This Court Cr.M.P.No.1598/2023, U/s.70(2) Cr.P.C. Petition filed and the same was allowed on 26.10.2023. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3. This Court Cr.M.P.No.9/2025, U/s.70(2) Cr.P.C. Petition filed and the same was allowed on 11.11.2025.<br>4. This Court M.P.No.17/2026, U/s.70(2) Cr.P.C. Petition filed and the same was allowed on 17.03.2026. | | |
| vi. | Date of examination in-chief and cross-examination of a witness | : | PW-1 | 19.08.2021 | 19.08.2021 |
| | | | PW-2 | 08.09.2021 | 08.09.2021 |
| | | | PW-3 | 08.09.2021 | 08.09.2021 |
| | | | PW-4 | 31.03.2022 | 31.03.2022 |
| | | | PW-5 | 31.03.2022 | 31.03.2022 |
| | | | PW-6 | 31.03.2022 | 31.03.2022 |
| | | | PW-7 | 31.03.2022 | 31.03.2022 |
| | | | PW-8 | 22.04.2022 | 22.04.2022 |
| | | | PW-9 | 22.04.2022 | 22.04.2022 |
| | | | PW-10 | 03.02.2026 | 03.02.2026 |
| | | | PW-11 | 06.02.2026 | 06.02.2026 |
| | | | PW-12 | 25.03.2025 | 25.03.2026 |
| | | | PW-13 | 26.03.2026 | 26.03.2026 |
| | | | PW-14 | 27.03.2026 | 27.03.2026 |
| vii. | Date of examination of the accused u/s 313 of the Code | | 27.03.2026 | | |
| viii. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | | - | | |
| ix. | Grant of stay by superior Courts and the results thereof | | - | | |
| x. | Details of Victim Compensation ordered | | - | | |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்காக இன்று 27.03.2026–ஆம் தேதியன்று வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.எஸ். கண்ணதாசன், அவர்கள் ஆஜராகியும், 1–ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.D.பாண்டுரங்கன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பில் கற்றநிந்த வழக்கறிஞர் திரு.M.ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## தீர்ப்புரை

இவ்வழக்கானது கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர், திருவண்ணாமலை உட்கோட்டம் அவர்களால், கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய குற்ற எண்.357/2016, ச/பி.147, 148, 324, 506(ii), 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) SC/ST (POA) Amendment Act 2015 இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்ட வழக்காகும்.

**2. அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்;**

இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தங்கம் (எ) தங்கராஜ், த/பெ.சிவா என்பவர் இந்து ஆதிதிராவிடம் வகுப்பைச் சேர்ந்தவர். எதிரிகள் அனைவரும் பட்டியல் இனத்தை சாராத இந்து வன்னியர் இனத்தை சேர்ந்தவர்கள். விநாயகர் சதுர்த்தியில் ஏற்பட்ட தகராறின் காரணமாக முன்விரோதம் கொண்டு, 29.10.2016 அன்று 17.30 மணியளவில், மேக்களூர் கிராம ரேசன்

கடை அருகே எதிரிகள் அனைவரும் கலகம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கைகளில் கத்தி, கல் போன்ற ஆயுதங்களுடன் சட்ட விரோதமாக கும்மலாக ஒன்று கூடி, எதிரிகள் அனைவரும் அ.சா.1 பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து ஆதிதிராவிடர் என்று தெரிந்தே அவரை அசிங்கப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் பொது இடத்தில் டேய் பறத்தேவடியா பைய்யா என்று சாதி பெயரை சொல்லி இழிவாக பேசி அசிங்கப்படுத்தியதாகவும், 1–ஆம் எதிரி அ.சா.1 ஐ கூர்மையான கல்லால் தலையின் பின்புறம் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனை தொடர்ந்து 1 முதல் 8 வரையிலான எதிரிகள் மற்றும் இறந்த 9–ஆம் எதிரி ஆகியோர் அ.சா.1 ஐ பார்த்து கையில் வைத்திருந்த ஆயுதத்தை காண்பித்து கொலை செய்துவிடுவதாக குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே மேற்படி குற்றத்திற்காக எதிரிகள் பிரிவு 147, 148, 324, 506(ii), 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) SC/ST (POA) Amendment Act 2015 இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளனர் என்பதாகும்.

3. இவ்வழக்கானது முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 03.06.2019 அன்று சிறப்பு அமர்வு வழக்கு எண்.34/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்த்தின் R.O.C.No.1061/A/2015/G4, நாள்.22.06.2018 தேதியிட்ட உத்தரவின்படி, இவ்வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.106/2019 என வழக்கு கோப்பானது எண்ணிடப்பட்டு, எதிரி இந்நீதிமன்த்தில் ஆஜரானதும், எதிரிக்கு

கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. இருதரப்புக்கும் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பும் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், 1–ஆம் எதிரிக்கு எதிராக பிரிவு 147, 148, 324, 506(ii) r/w 149 IPC and Sec.3(1)(r) of SC/ST (POA) Amended Act 2015 இன் கீழும், 2 முதல் 9 வரையிலான எதிரிகளுக்கு எதிராக பிரிவு 147, 148, 506(ii) r/w 149 IPC and Sec.3(1)(r) of SC/ST (POA) Amended Act 2015 இன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக்கூறி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு என்று கூறி குற்றத்தை மறுத்தனர். அதனால் வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது.

5. அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொறுட்டு, அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.14 வரையிலான சாட்சிகள் விசாணை செய்யப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியிடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிரிருந்து, வெளிப்படும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

(அ) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தங்கம் (எ) தங்கராஜ், த/பெ.சிவா என்பவர் இந்து ஆதிதிராவிடம் வகுப்பைச் சேர்ந்தவர். எதிரிகள் அனைவரும் பட்டியல் இனத்தை சாராத இந்து வன்னியர் இனத்தை சேர்ந்தவர்கள். கடந்த விநாயகர் சதுர்த்தியில் ஏற்பட்ட தகராறின் காரணமாக முன்விரோதம் கொண்டு, 29.10.2016 அன்று 17.30 மணியளவில், மேக்களூர் கிராமம் ரேசன் கடை அருகே பட்டியல் இனத்தை சாராத எதிரிகள்

அனைவரும் கலகம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கைகளில் கத்தி, கல் போன்ற ஆயுதங்களுடன் சட்ட விரோதமாக கும்மலாக ஒன்று கூடி, அ.சா.1 பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து ஆதிதிராவிடர் என்று தெரிந்தே அவரை அசிங்கப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் பொது இடத்தில் டேய் பறத்தேவடியா பைய்யா என்று சாதி பெயரை சொல்லி இழிவாக பேசி அசிங்கப்படுத்தி, 1–ஆம் எதிரி அ.சா.1 ஐ கூர்மையான கல்லால் தலையின் பின்புறம் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, அதனை தொடர்ந்து 1 முதல் 8 வரையிலான எதிரிகள் மற்றும் இறந்த 9–ஆம் எதிரி ஆகியோர் அ.சா.1 ஐ பார்த்து கையில் வைத்திருந்த ஆயுதங்களை காண்பித்து கொலை செய்துவிடுவதாக குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

(ஆ) இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேற்படி அ.சா.1 திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று, அன்றே இரவு 21.00 மணிக்கு கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் ஆஜராகி புகார் மனு (அ.த.சா.ஆ.1) அளித்துள்ளார். கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த அ.சா.12 கோவிந்தசாமி, காவல் ஆய்வாளர் அவர்கள் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் (அ.த.சா.ஆ.1) பெற்று, கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய குற்ற எண்.357/2016, ச/பி.147, 148, 324, 506(ii), 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) SC/ST (POA) Amendment Act 2015 இன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.ஆ.6) பதிவு செய்து, இவ்வழக்கிற்கு புலன் விசாரணை அதிகாரி நியமிக்கக்கோரி காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளர். அந்த வேண்டுகோள் கடிதத்தின்பேரில் காவல்

கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை C.No.G1/42/SCST Act/2016/dated 29.10.2016 (அ.த.சா.ஆ.9) இன் படி அ.சா.14 காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சரவணகுமார் என்பவர் இவ்வழக்கினை புலன் விசாணைக்கு எடுத்துக்கொண்டு, 30.10.2016 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்தை அ.சா.7 சீதாராமன் மற்றும் அ.சா.9 சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.த.சா.ஆ.7) மற்றும் மாதிரி வரைபடம் (அ.த.சா.ஆ.8) தயார் செய்து, அன்றே இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தங்கம் (எ) தங்கராஜ் என்பவரையும், இவ்வழக்கின் குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 குட்டி ஏழுமலை, அ.சா.3 சிவசக்தி, அ.சா.4 வினோத்குமார், அ.சா.5 முரளி, அ.சா.6 கிஷோர்குமார், அ.சா.8 சிலம்பரசன் மற்றும் அ.சா.13 துரை ஆகியோர்களையும், பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.7 சீதாராமன் மற்றும் அ.சா.9 சுப்பிரமணி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

(இ) அவரது விசாரணையின் அடிப்படையிலும், இரகசிய தகவலின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால், அன்றே காலை 7 மணிக்கு மேக்களூர் நிறுத்தம் அருகே இருந்த 3–ஆம் எதிரி கார்த்தி என்பவரையும், இறந்த 9–ஆம் எதிரி விஜி என்பவரையும் கைது செய்து, நிலையம் அழைத்துவந்து, அவரது விசாரணையின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையில் (அ.த.சா.ஆ.6) 5 முதல் 7 எதிரிகளாக குறிப்பிடப்பட்ட முறையே கோபால்சாமி, பரசுராமன், சத்தியமூர்த்தி ஆகியோர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரியவராததால் அவர்களின் பெயர்களை நீக்கம் செய்து, கைது செய்த மேற்படி 9–ஆம் எதிரி விஜி என்பவரை தனி

அறிக்கை (அ.த.சா.ஆ.10) இன் மூலம் இவ்வழக்கில் எதிரியாக சேர்த்து 3 மற்றும் 9 வது எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பின்னிட்டு 20.12.2016 அன்று கீழ்பென்னாத்துார் வட்டாட்சியர் முருகன் (அ.சா.10) என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கின் புகார்தாரர் (அ.சா.1) தங்கம் (எ) தங்கராஜ் மற்றும் எதிரிகள் 1 முதல் 8 மற்றும் இறந்த 9–ஆவது எதிரி ஆகியோர்களின் சாதி குறித்த அறிக்கை (அ.த.சா.ஆ.4) பெற்றுள்ளார். பின்னிட்டு அ.சா.14 காவல் துணை கண்காணிப்பாளர் சரவணகுமார் என்பவர் பணிமாறுதல் பெற்று சென்றதால், இவ்வழக்கின் வழக்கு கோப்பினை உதவி காவல் கண்காணிப்பாளர் பட்டியல் சாட்சி–15 ரவளபிரியா என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். மேற்படி உதவி காவல் கண்காணிப்பாளர் ரவளபிரியா என்பவர் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த திருவண்ணாமலை அரசு மருத்துவமனை மருத்துவர் ராஜசெல்வம் (அ.சா.11) என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று குறிப்பிட்ட விபத்து பதிவேடு (அ.த.சா.ஆ.5) பெற்றுள்ளார். இத்துடன் அவரது விசாரைணயை முடித்து மேற்படி சாட்சிகள் அளித்த வாக்குமூலங்களின் அடிப்படையிலும், வழக்கு ஆவணங்களை பார்வையிட்டும், எதிரிகளுக்கு எதிராக ச/பி.147, 148, 324, 506(ii), 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) SC/ST (POA) Amendment Act 2015 இன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

7. அரசுத் தரப்பில் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்ட பிறகு, அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் உள்ள எதிரிகளுக்கு எதிரான பகுதிகள் குறித்து, கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழ் 1 முதல் 8 வரையிலான எதிரிகளிடம் வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும் கூறி தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>8 தற்போது இங்கு தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவெனில்,</u>**

எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு, அரசுத் தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்று நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்தே ஆகும்.

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் தனது வாதத்தில், அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரிகள் தன்னை சாதி பெயரை சொல்லி இழிவாக திட்டியது குறித்தும், தன்னை தாக்கியது குறித்தும், சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேற்படி அ.சா.1 இன் சாட்சியத்தை மருத்துவர் சாட்சியமான அ.சா.11 இன் சாட்சியம் ஒத்துரைக்கிறது என்றும், அ.சா.12 தான் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், அ.சா.14 புலன் விசாரணை மேற்கொண்டது குறித்தும் விரிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மேலும் இந்த வழக்கு SC/ST (POA) Act வரையரைக்குள்ள வருகிறது என்பதை நிரூபிப்பதற்கு அரசுத் தரப்பில் அ.சா.10 வழங்கிய சாதி குறித்த அறிக்கை அ.சா.4 ஆக தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளை குற்றவாளிகள் என்று தீர்மானிக்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

10. எதிரிகள் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையில் தன்னை எதிரிகள் ஜாதி பெயரை சொல்லி திட்டியதாக சாட்சியம் அளித்திருந்தாலும், அன்றையதினமே அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், அந்த குறுக்கு விசாரணையின்போது, அவர் கும்பலாக இருந்த நபர்களில் யாரே சிலர் ஜாதி பெயரை சொல்லி பேசினார்கள் என்றும், எதிரிகள் தன்னை குறித்து நேரடியாக பேசவில்லை என்றும், தான் சந்தேகத்தின் பேரில்தான் புகார் கொடுத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 இன் சாட்சியமானது குறுக்கு விசாரணையின்போது, முதல் விசாரணைக்கு முற்றிலும் முரண்பட்டுள்ளது என்றும், எனவே அ.சா.1 இன் சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 முதல் அ.சா.6, அ.சா.8 மற்றும் அ.சா.13 வரையிலானவர்கள் தாங்கள் எதையும் பார்க்கவில்லை என்றும், தங்களுக்கு இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றும், அரசுத் தரப்பிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.14 தான் சம்பவ இடத்திற்கு சென்று அ.சா.7 மற்றும் அ.சா.9 இன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சாட்சியம் அளித்திருந்தாலும், அ.சா.7 மற்றும் அ.சா.9 இன் சாட்சியமானது அ.சா.14 இன் சாட்சியத்தை ஒத்துரைப்பதாக இல்லை என்றும், இந்த வழக்கு அரசுத்

தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்று நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

11. அரசுத் தரப்பு வழக்கானது அ.சா.1 இந்து ஆதிதிராவிட பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என்றும், எதிரிகள் 1 முதல் 8 மற்றும் இறந்த 9 ஆம் எதிரி இந்து வன்னியர் இனத்தை சார்ந்த, பட்டியல் இனத்தை சாராதவர்கள் என்றும், 29.10.2016 அன்று எதிரிகள் அனைவரும் கைகளில் பயங்கரமான ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக ஒன்றுகூடி அ.சா.1 ஐ இழிவுபடுத்தும் நோக்கோடு பொது இடத்தில் வைத்து அவரது சாதி பெயரை சொல்லி இழிவாக திட்டியதாகவும், 1–ஆம் எதிரி அ.சா.1 இன் தலையின் பின்புறம் கல்லால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும், மேலும் எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்தனர் என்பதாகும்.

12. அ.சா.1 29.10.2016 அன்று தான், அ.சா.2 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8, அ.சா.13 ஆகியோர் மேக்களூர் சமத்துவபுரத்தில் இருந்தபோது, ரேஷன் கடை அருகே எதிரிகள் தங்களை தகாத வார்த்தையால் திட்டி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும், 1–ஆம் எதிரி தன் தலையின் பின்பக்கத்தில் கல்லால் குத்தியதாகவும், தான் அதுசம்மந்தமாக மருத்துவமனை சென்று பின்னிட்டு, காவல் நிலையத்தில் அ.த.சா.ஆ.1 புகார் அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அன்றைதினமே குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். தன்னுடைய குறுக்கு விசாரணையின்போது, 29.10.2016 அன்று சம்பவ இடத்தில் நிரைய நபர்கள் பட்டாசு வெடித்துக்கொண்டிருந்ததாகவும், தான் அந்த பக்கமாக

போய்கொண்டிருந்தபோது, கூட்டத்தில் இருந்தவர்கள் யாரோ சாதி பெயரை சொல்லி பேசிக்கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரிகள் யாரும் தன்னை நேரடியாக பேசவில்லை என்றும், தான் சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்ததாகவும், தன்னுடைய முதல் விசாரணைக்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.6 மற்றும் அ.சா.8 மற்றும் அ.சா.13 அனைவருமே சம்பவத்தை குறித்து எவ்விதமான சாட்சியமும் அளிக்கவில்லை. தங்களுக்கு இந்த வழக்கு குறித்து பதுவும் தெரியாது என்றும், 2016 ஆம் வருடத்தில் ஒரு இடத்தில் கூட்டமாக இருந்ததாகவும், வேறு எதுவும் தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.2 முதல் அ.சா.6, அ.சா.8 மற்றும் அ.சா.13 தாங்கள் சம்பவத்தை பார்த்ததாகவோ, எதிரிகள் குறித்தோ, எதிரிகளின் குற்ற செய்தி குறித்தோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.2 முதல் அ.சா.6, அ.சா.8 மற்றும் அ.சா.13 இன் சாட்சியங்கள் அ.சா.1 இன் சாட்சியத்தை ஒத்துரைப்பதாக இல்லை. எனவே, அ.சா.2 முதல் அ.சா.6, அ.சா.8 மற்றும் அ.சா.13 இன் சாட்சியங்கள் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு எவ்வித உதவியாகவும் இல்லை.

13. அ.சா.11 தன்னிடம் அ.சா.1 பரிசோதனைக்கு வந்ததாகவும், தான் அ.த.சா.ஆ.5 விபத்து பதிவேடு வழங்கியதாகவும் சாட்சியம் அளித்திருந்தாலும், அரசுத் தரப்பு வழக்கின்படி சம்பவம் 29.10.2016 அன்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 30.10.2016 அன்று நள்ளிரவு 1.05 மணிக்குதான் அ.சா.1 சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.த.சா.ஆ.1 புகார்

மனுவானது 29.10.2016 அன்று 21.00 மணிக்கு பெறப்பட்டு, அ.த.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதன் பிறகு ஏற்படுத்தப்பட்ட ஆவணமாக விபத்து பதிவேடு (அ.த.சா.ஆ.5) இல் அ.சா.1 மருத்துவமனைக்கு நமுனாவுடன் வந்ததாக குறிப்பிடப்படவில்லை. மேலும் விபத்து பதிவேட்டில் அ.சா.1 பத்து நபர்கள் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்படும் எதிரிகளின் எண்ணிக்கை அரசுத் தரப்பு வழக்கிற்கு மாறுபட்டுள்ளது. அ.சா.1 ஐ 1–ஆம் எதிரி கல்லால் அவரது தலையின் பின்புறம் தாக்கியதாக அரசுத் தரப்பு வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் விபத்து பதிவேட்டில் அ.சா.1 ஐ கல்லால் தாக்கியதாக குறிப்பிடவில்லை. மேலும் அந்த கல்லை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுமில்லை. எனவே அ.சா.1 கல்லால் தாக்கப்பட்டது குறித்து சந்தேகம் எழுவதைக் காணமுடிகிறது. அ.சா.1 ஐ தவிர வேறு எந்த கண்ணுற்ற சாட்சிகளும் அரசுத் தரப்பு வழக்கை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காத நிலையில், அ.சா.1 இன் சாட்சியமும் அவரது முதல் விசாரணைக்கும், அவரது குறுக்கு விசாரணைக்கு முற்றிலும் முரண்பட்டுள்ள நிலையிலும், விபத்து பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மாறுபட்டுள்ள நிலையிலும், அ.சா.1 இன் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள்தான் இந்த குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்று தீர்மானிக்க இயலாது.

14. மேலும், அ.சா.14 புலன் விசாரணை அதிகாரி தான் அ.சா.9 செயல்முறை ஆணையின்படி புலன் விசாணை அதிகாரியாக

நியமிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், செயல்முறை ஆணையின் அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் அவர் தான் 30.10.2016 அன்று சம்பவ இடத்தை அ.சா.7 மற்றும் அ.சா.9 இன் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், அ.சா.7 மற்றும் அ.சா.9 இருவரும் அ.சா.14 இன் சாட்சியத்தை ஒத்துரைத்து கூறவில்லை. மேலும் அ.த.சா.ஆ.7 பார்வை மகஜரில் எத்தனை மணிக்கு சம்பவ இடத்தை அ.சா.14 பார்வையிட்டார் என்ற விவரம் குறிப்பிடப்படாமல் உள்ளது. இந்நிலையில் அ.த.சா.ஆ.7 பார்வை மகஜர் தயார் செய்யப்பட்ட விதம் குறித்து சந்தேகம் எழுகிறது.

15. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் அ.த.சா.ஆ.4 சாதி குறித்த அறிக்கை அ.சா.10 இன் மூலம் அ.சா.1 இந்து ஆதிதிராவிடர் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்றும், எதிரிகள் 1 முதல் 8 மற்றும் இறந்த 9–ஆம் எதிரி இந்து வன்னியர் இனம் அதாவது பட்டியல் இடப்படாத இனத்தை சாராதவர்கள் என்று நிரூபித்து இருந்தாலும், எதிரிகள் கையில் ஆயுதங்களுடன் சட்ட விரோதமாக ஒன்றுகூடி அ.சா.1 ஐ பொது இடத்தில் வைத்து இழிவுபடுத்தும் வகையில் சாதி பெயரை குறித்து பேசி, 1–ஆம் எதிரி அ.சா.1 இன் பின்புற தலையில் கல்லால் அடித்து காயப்படுத்தியதாகவோ சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து குற்றமற்றவர்கள்

என்று தீர்மானித்து, எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக 1–ஆம் எதிரி பிரிவு 147, 148, 324, 506(ii) r/w 149 இ.த.ச. மற்றும் பிரிவு.3(1)(r) of SC/ST (POA) Amended Act 2015 இன் கீழும், 2 முதல் 8 வரையிலான எதிரிகள் பிரிவு 147, 148, 506(ii) r/w 149 இ.த.ச. மற்றும் பிரிவு 3(1)(r) of SC/ST (POA) Amended Act 2015 இன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது. 9–ஆம் எதிரி விஜி இறந்துவிட்டபடியால் அவருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டதாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே அதுகுறித்த உத்தரவு எதுவும் இல்லை. எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணங்கள் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–S. காஞ்சனா,
அமர்வு நீதிபதி,(மு.கூ.பொ)
சிறப்பு நீதிமன்றம் எஸ்.சி/எஸ்.டி வழக்குகள்,
திருவண்ணாமலை.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள் :</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.தங்கம் (எ) தங்கராஜ் |
| அ.சா.2 | திரு.குட்டி ஏழுமலை |
| அ.சா.3 | திரு.சிவசக்தி |
| அ.சா.4 | திரு.வினோத்குமார் |
| அ.சா.5 | திரு.முரளி |
| அ.சா.6 | திரு.கிஷோர்ராஜ் |
| அ.சா.7 | திரு.சீதாராமன் |
| அ.சா.8 | திரு.சிலம்பரசன் |
| அ.சா.9 | திரு.சுப்பிரமணி |
| அ.சா.10 | திரு.இரா.முருகன் |
| அ.சா.11 | திரு.ராஜசெல்வம், மருத்துவர் |
| அ.சா.12 | திரு.கோவிந்தசாமி, காவல் துணை கண்காணிப்பாளர் |
| அ.சா.13 | திரு.துரை |
| அ.சா.14 | திரு.சரவணகுமார், காவல் கண்காணிப்பாளர் |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 29.10.2016 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | 30.10.2016 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.7 இன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 | 30.10.2016 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.9 இன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 | 23.12.2016 | சாதி குறித்த அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | 30.10.2016 | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.6 | 29.10.2016 | முதல் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.7 | 30.10.2016 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.8 | 30.10.2016 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.9 | 29.10.2016 | காவல் துறை கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை |
| அ.த.சா.ஆ.10 | 30.10.2016 | தனி அறிக்கை |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்: இல்லை.</u>**

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை.</u>**

ஒம்/–S. காஞ்சனா,
அமர்வு நீதிபதி,(மு.கூ.பொ)
சிறப்பு நீதிமன்றம் எஸ்.சி/எஸ்.டி வழக்குகள்,
திருவண்ணாமலை.